# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ     அதிவிசேஷமானது

අංක 1899/9 - 2015 ජනවාරි 27 වැනි අඟහරුවාදා - 2015.01.27

***1899/9 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

**(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், பியகம பிரதேச செயலாளர் பிரிவில், அதிகாரி பத்துவ சிறுபிரிவில் இஹல பியன்வில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.08.06ஆந் திகதிய மற்றும் கம்/பிய/2014/191 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 0.0436 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு எழுத்து 'ஏ' - கொன்னகஹவத்த வத்த - விஸ்தீரணம் : சுமார் 0.0436 ஹெக்டயார்**

வடக்கு : கால்வாய், மு. பி. கம் 3669 இன் துண்டு இல. 18( கால்வாய்) மற்றும் மு. பி. கம் 3669 இன் துண்டு இல. 8 ; கிழக்கு : மு. பி. கம் 3669 இன் துண்டு இல. 8 ; தெற்கு : மு. பி. கம் 3669 இன் துண்டு இல. 8 மற்றும் 18 (கால்வாய்) ; மேற்கு: மு. பி. கம் 3669 இன் துண்டு இல. 18 மற்றும் கால்வாய்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/7/2013/எச்டபிள்யூ/01.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2014.10.31.

02 - 276


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.